சென்னை, ஜூலை 27-

ஜனாதிபதி அப்துல் கலாம் ஆசி, வாழ்த்துக்களோடு மயிலாப்பூரில் திருமதி ஒய்.ஜி.பி. பள்ளி என்னும் புதிய பள்ளி உதயமாகி இருக்கிறது.

இந்தியாவின் 'டாப்-10' கல்வி நிலையங்களில் ஒன்றாக இடம் பெற்றிருக்கும் சென்னையில் பிரபலமான பத்மா சேஷாத்திரி பாலபவன் பள்ளியின் ஸ்தாபகர் திருமதி. ஒய்.ஜி.பார்த்தசாரதியின் பெயரில், அவரது மகள் வழி பேத்தி மதுவந்தி அருண் (நகைச்சுவை நடிகர் மகேந்திராவின் மகள்) பெருமைமிகு இப்புதிய பள்ளியைத் துவக்கி விருக்கிறார்.

சுமார் 40 ஆண்டு காலம் கல்விக் கண் திறக்கும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, கல்வித்துறையில் தனி முத்திரை பதித்து, பாராட்டு பெற்றிருக்கும் பாட்டி திருமதி. ஒய்.ஜி.பி.யின் (80 வயதைக் கடந்த நிலையிலும் இன்றும் இருபது வயதுக்கான செயல் வேகம்) அடிச்சுவட்டில் ஆழ வேரூன்ற வலது கால் எடுத்து வைத்திருக்கிறாள் பேத்தி மதுவந்தி அருண்.

பொதி சுமப்பது போல புத்தக மூட்டையை பிஞ்சு குழந்தைகள் சுமக்க முடியாமல்-சுமந்து கொண்டு போகும் நிலைக்கு அடியோடு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில்- புதிய ஏற்பாடுகளின்படி இந்த பள்ளியை துவக்கியிருக்கிறார் மதுவந்தி.

இந்த புதிய பள்ளி துவக்கம்- செயல்பாடு- எதிர்கால திட்டம் என்னென்ன என்பது பற்றி பள்ளியின் தாளாளர் மதுவந்தி அருண் நிருபர்களிடம் விளக்கினார். அப்போது அவர் கூறியதாவது:-

"ஒரு தாய் தன் குழந்தைக்கு உணவு ஊட்டுவது போல் குழந்தைகளுக்கு புதுமையான முறையில் கல்வி வழங்குகிறது மயிலாப்பூர் கிருஷ்ண சுவாமி அவென்யூவில் உள்ள ஒய்.ஜி.பி. ஸ்கூல். பொதி சுமப்பதைப் போல் கட்டுக்கட்டாக புத்தகங்களை கிலோ கணக்கில் தூக்கி வரவேண்டியதில்லை.

அறிவுத்திறனை வளர்க்க தனியாக வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. இசை, நடனம், உடற்பயிற்சி மற்றும் நமது கலாச்சாரம், பாரம்பரியத்தோடு கல்வி இங்கே கற்பிக்கப்படுகிறது.

## தரைவிரிப்பில் உட்கார்ந்து பாடம்

எல்.கே.ஜி. வகுப்பு குழந்தைகளை பெஞ்சில் உட்கார வைத்து ஆசிரியை பாடம் சொல்லி கொடுப்பதில்லை. அழகான தரை விரிப்பில் குழந்தைகள் உட்கார்ந்திருக்க அதன் நடுவில் ஆசிரியை அமர்ந்து கல்வி கற்று தருகின்றனர். கவனிக்காத குழந்தை களிடம் கொஞ்சி பேசி கற்றுக் தந்து கவனிக்க வைக்கின்றனர்.

ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் நல்லொழுக்கத்தையும் சேர்த்து கல்வி தருவது இப்பள்ளியின் சிறப்பம்சமாகும். எல்.சி.டி. போர்டு (கணினி திரை) மூலம் கல்வி கற்று தருவது இப்பள்ளியின் பெருமை. மேலும் கம்ப்யூட்டரில் உட்கார வைத்து பாடங்களை சொல்லி தருகின்றனர். பிஞ்சு குழந்தைகள் 'மவுசை' கையில் பிடித்து கம்ப்யூட்டர் பாடம் படிப்பது பாராட்டுக்குரியது.

குழந்தைகளை கவர்ந்திழுக்கும் வண்ணங்கள் தீட்டப்பட்ட வகுப்பறை, வகுப்பறையில் வேடிக்கை விளையாட்டு பொருட்கள், படங்கள் உள்ளன. தான் கற்றுக் கொள்ளும் பாடங்களை பற்றிய படங்கள் சுவர் முழுவதும் உள்ளதால் ஆசிரியை சொல்லி கொடுப்பதோடு பாடம் சம்பந்தப்பட்ட பொருட்களை, படங்களை பார்ப்பதால் உடனே மனதில் நிலை நிறுத்திக் கொள்கிறார்கள் குழந்தைகள். கணக்கு வகுப்பறையில் உச்சிக்கூரையில் கூட 'ஒன்-டு-திரி' எழுதி வைத்துள்ளனர்.

## எல்.கே.ஜி. முதல் 3-ம் வகுப்பு வரை

கடந்த வருடம் ஜனாதிபதி அப்துல் கலாம் துவக்கி வைத்த இப்பள்ளியில் தற்போது எல்.கே.ஜி. முதல் 3-ம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது. இப்போது 270 குழந்தைகள் படித்து வருகிறார்கள். 15 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் வகுப்புகள் பிரிக்கப்பட்டுள்ளது. 33 ஆசிரியைகளுடன் மொத்தம் 40 பேர் பணிபுரிகின்றனர். அடுத்த கல்வி ஆண்டில் (2007-2008) 4-ம் வகுப்பு துவக்கப்படும்.

குழந்தைகளை பெற்றோர்கள் பள்ளிக்கு அழைத்து வர வேண்டியதில்லை. பள்ளி வேனில் மட்டுமே குழந்தைகளை அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு வேனிலும் 20 குழந்தைகள் மட்டுமே அழைத்து செல்லப்படுவார்கள். குழந்தை களுடன் ஒரு ஆயா, டீச்சர் வருவார்கள். இதனால் குழந்தைகள் மிகுந்த பாதுகாப்புடன் வேனில் அழைத்து செல்லப்படுகிறார் கள். பள்ளி நேரம் காலை 8 மணி முதல் 1 மணி வரை மட்டுமே.

## தன்னம்பிக்கை தைரியம்

குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை, தைரியம் ஊட்டும் வகையில் உடற்பயிற்சி, விளையாட்டு, தற்காப்பு பயிற்சியும் சொல்லித் தரப்படுகிறது.



திருமதி ஒய்.ஜி.பி. பள்ளியின் முகப்பு தோற்றம்.

பிரிட்டனில் லங்காஷையரில் உள்ள எட்வர்ட்டு ரிச்சர்ட்சன் பிரைமரி ஸ்கூல் என்னும் பள்ளியோடு ஒய்.ஜி.பி. பள்ளி இணைந்து புதிய முறையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இங்குள்ள ஆசிரியையின் ஒரு குழு அங்கு சென்று அங்கு பயிற்சி பெறும். அங்குள்ள ஆசிரியர் குழு இங்கு பயிற்சி பெற்று செல்வார்கள்.

இவ்வாறு பள்ளி தாளாளர் மதுவந்தி அருண் கூறினார்.

பாரதிநடம்பள்ளி-தலைமையாசிரியை, நளினி சுப்பிரமணியன், சுஜாதாராம்பிரசாத்- ஆகியோர் நிர்வாகத்தில் இந்த பள்ளி இயங்கி வருகிறது.

## இளம்வயது சாதனையாளர்-மதுவந்தி

★ மதுவந்தி-பத்மாசேஷாத்திரி பள்ளி முன்னாள் மாணவி. விஷுவல் கம்யூனிகேஷனில் பட்டம் பெற்றவர். பத்மா சேஷாத்திரி பள்ளியில் ஆசிரியையாகவும், தனி பிரிவில் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியவர். மனோஜ்பிரகாஷுடன் சேர்ந்து இவர் எழுதிய சுற்றுப்புறச்சூழல் குறித்த அறிவியல் புத்தகம், சென்னையில் பிரபல பள்ளிகள் பெரும்பாலானவற்றில் பாடமாக வைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து சர்வதேச பள்ளி விருதைப் பெற்றவர். அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் 20-க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு விஜயம் செய்து பாட போதனை-உத்திகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டவர். லாப நோக்கில்லாமல் 'நாட்டியம்' என்ற அறக்கட்டளையை நடத்தி வருகிறார். இந்தியாவிலும், வெளிநாடுகளி லும் கலை-கலாச்சார தூதராக சென்று எண்ணற்ற நாட்டிய நிகழ்ச்சிகளை வெற்றிகர மாக நடத்தி இளம்வயதில் பாராட்டு பெற்றவர் இவர்.



★ பாரதி-நடம் பள்ளி- எம்.ஏ., எம்.எட். பட்டதாரி. ஆரம்ப பிரிவில் (பிரைமரி) சுமார் 30 ஆண்டுகள் பாடம் சொல்லிக் கொடுத்து பழுத்த அனுபவம் பெற்றவர். எதையும் புதிய கண்ணோட்டத்தில் பார்த்து திருமதி. ஒய்.ஜி.பி.யைப்போல தொலைநோக்கோடு சிந்தித்து செயல்படும் ஆற்றல்மிக்கவர். சிறந்த நல்லாசிரியர் விருது பெற்றவர். பிஞ்சு வயதிலேயே குழந்தைகளை- ஆற்றல்மிகு மாணவர்களாக்கி- அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமையை அறிந்து சாதனைக்கு தயார்படுத்தும் திறமைசாலி.